DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calendar Case No | | .... | **CC 889/2025** | | |
| Deposition of Witness for | | | PW 1 (LW1) | | |
| | | | Prosecution Side Witness | | |
| | | | Court | | |
| Name | : | **திரு. கணேசன்** | Taluk | : | ஆத்தூர் |
| Father Name | : | **த.பெ.திரு. கந்தன்** | Calling | : | தலைமைக்காவலர் |
| Village | : | ஆத்தூர் ஊரக காவல் நிலையம் | Age | | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.08.2026. **துவக்க நேரம்**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.11.2024அன்று காலை 09.30 மணியளவில் நானும், என்னுடன் தலைமைக் காவலர் திரு. ஆனந்தன் என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜெயசூர்யா அவர்கள் தலைமையில், மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆத்தூர் ஊரக காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கொத்தாம்பாடி கிராமப்பகுதியில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் ராயர் த.பெ சுப்புநாயக்கர் என்று கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த சுமார் 180 Ml அளவு கொண்ட Mens club Brandy – 09 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி ராயர் என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 180 Ml அளவு கொண்ட Mens club Brandy – 09பாட்டில்களை அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 1-வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்திலேயே யாருக்கும் பயன்படா வண்ணம் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் உதவி ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் பாட்டில்களை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம். கண்காணிப்பின்போது காவல் ஆய்வாளர் உடன் வந்தாரா என்றால் வரவில்லை. காவல் ஆய்வாளர் இல்லாமல் கண்காணிக்க அதிகாரம் உள்ளதா என்றால் சரியல்ல.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**முடிவு நேரம்**

| Taken Down by me in Open Court Read over to the dependant in the presence of the accused and admitted by the deponant to be correct |
|---|
| N MOHANASUNDARAM   Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.08.08 16:26:03 +0530<br>Judicial Magistrate No.1(FAC)<br>Attur. |